Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-2**

Name : ராஜேந்திரன்
Father / Husband name : சின்னபையன்
Village : கொள்ளார்
Age : 60
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 பாஸ்கரனை எனக்கு தெரியும். சாட்சிகள் ஏழுமலை, விஜயக்குமார் ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2023 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை ஒருநாள் மாலை நேரத்தில் அ.சா.1 ரோந்து பணிக்கு வந்தபோது ஆஜர் எதிரி மற்றும் அவரின் அண்ணனும் கொள்ளார் பேருந்து நிறுத்தம் அருகே ரோட்டில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அதனை அ.சா.1 கேட்டபோது அ.சா.1க்கும் எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அதில் எதிரி அ.சா.1 அசிங்கமாக பேசினார். பின்னர் நான் அங்கிருந்து சென்றுவிட்டேன். இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி அ.சா.1 ஐ அசிங்கமாக பேசவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, நான் பேருந்து நிறுத்தம் அருகே நின்றிருந்தேன், சண்டையை பார்த்துவிட்டு அங்கிருந்து

சென்றுவிட்டேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை, அது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவா் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டாா்//

நீதித்துறை நடுவா் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-3**

Name : ராமதாஸ்
Father / Husband name : செல்வராஜ்
Village : கொள்ளார்
Age : 54
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்துவருகிறேன். சாட்சி ராஜன் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2023 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை ஒருநாள் காலை சுமார் 10 மணியளவில் எதிரியும் அவரின் அண்ணனும் அடித்துக்கொண்டபோது போலிசார் வந்து கேட்டபோது பிரச்சனை நடந்தது அது சம்மந்தமாக வரைபடம் போட்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 1வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்து தனியாக வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. படம் வரைவதற்கு முன்பாக கையொப்பம் கேட்டார்களா

என்றால் படம் வரைந்துகொண்டிருக்கும்போது என்னிடமும், ராஜன் என்பவரிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னவாறு படம் வரைந்து கையொப்பம் வாங்கவில்லை, எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 181/2024 PW-4**

Name : ராஜன்
Father / Husband name : கண்ணன்
Village : கொள்ளார்
Age : 33
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

Accused present. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் தற்போது கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.3 ராமதாஸ் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் மாலை சுமார் 05.45 மணிக்கு கொள்ளார் மெயின்ரோட்டிலிருக்கும் பிள்ளையார் கோவில் அருகே ரோசணை போலிசார் வந்து சண்டை சம்மந்தமாக படம் வரைந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். **பார்வை மகசரில் உள்ள 2வது சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்து தனியாக வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் இரண்டு கையொப்பம் செய்தேன், அதில் ஒன்று காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளைத்தாளில் செய்தேன் என்றால் சரிதான்.

என்முன்பாக வரைபடம் வரையவில்லை, ஏற்கனவே வரைந்த வரைபடத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். போலிசார் கையொப்பம் கேட்டதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி -** தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள எனது கையொப்பத்தை எங்கு வைத்து செய்தேன் என்றால் நினைவில்லை, கொள்ளாறில் வரைபடத்தில் கையொப்பம் செய்தேன், காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்தேன்.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.